**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044366

1. District மாவட்டம் : கோவை    PS: காவல்நிலையம் V&AC    Year: ஆண்டு 2022    FIR No.: மு.த.அ. எண் 12/2022    Date: நாள் 7.10.22

2. (i) Act சட்டம்: Prevention of Anti Corruption Act 1988 amended by Prevention of Corruption (Amendment) Act-2018    Sections பிரிவுகள்: 7(a), 7(a) r/w 12.
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 30.9.22    Date to : நாள் வரை 6.10.22
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் சுமார் 02.30    Time to : நேரம் வரை சுமார் 1200 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 7.10.22    Time : நேரம் 0700
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 7.10.22    Time : நேரம் 0800

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Computer Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    about 20km north Cbe
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி    No. 3, பிளிச்சி பஞ்சாயத்து பிளிச்சி ஊராட்சி கோவை மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்    G. கார்த்திக்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்    ஞானசேகரன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்    Workshop    (g) Address : முகவரி    க.எண்: 13/07, சாய் ஸ்ரீ ரெசிடென்சி சுப்ரமணியம்பாளையம், ஜி.என். மில்ஸ், (போஸ்ட்), கோயம்புத்தூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி. சாவித்திரி, No. 03, பிளிச்சி ஊராட்சித்தலைவர் கோயம்புத்தூர் மாவட்டம்
   2) திரு. ராஜன் (சாவித்திரியின் கணவர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதம் இல்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 7-10-22

[signature] 07/10/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

D. Sheela

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.10.2022 at 09.30 hrs.

Name: பெயர் ..........
Rank: நிலை Ins of Police .......... No. எண் ..........
V/G AC Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>**

**<u>கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 12/2021/ AC/CB, u/s. 7(a) ,7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...</u>**

07.10.2022 -ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபொழுது கோயம்புத்தூர் ஜி.என்.மில்ஸ் போஸ்ட் சுப்பிரமணியம்பாளையம், சாய்ஸ்ரீ ரெசிடென்சி க.எண்.13/7 என்ற விலாசத்தில் வசிக்கும் குணசேகரன் மகன் G.கார்த்திக்,வயது 38, என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் நெ.3 பிளிச்சி ஊராட்சி தலைவராக பணி புரியும் திருமதி.சாவித்திரி மற்றும் அவரது கணவர் ராஜன் ஆகியோர் வாதியின் மனைவி பெயரில் வீடு கட்ட பிளான் அப்ரூவல் கொடுப்பதற்காக லஞ்சமாக பணம் ரூ.15,000/- கேட்டிருப்பது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 07.10.2022 -ம் தேதி 07.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.12/2021/AC/CB, u/s.7(a),7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரிகளான நெ.3 பிளிச்சி ஊராட்சி தலைவர் திருமதி.சாவித்திரி மற்றும் அவரது கணவர் திரு.ராஜன் ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் G.கார்த்திக்,வயது 38,த/பெ

குணசேகரன், க.எண்.13/7 சாய்ஸ்ரீ ரெசிடென்சி சுப்பிரமணியம்பாளையம், ஜி.என்.மில்ஸ் போஸ்ட், கோயம்புத்தூர். பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கவுண்டம்பாளயைம், கோயம்புத்தூர். அய்யா, நான் க.எண்.13/7 சாய்ஸ்ரீ ரெசிடென்சி, சுப்பிரமணியம்பாளையம், ஜி.என்.மில்ஸ் போஸ்ட்,கோயம்புத்தூரில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 9வது படித்துள்ளேன். நான் KNG புதூர் பிரிவில் ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப் வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் நெ.3 பிளிச்சி பஞ்சாயத்துக்குட்பட்ட கோட்டைபிரிவு வேலன்நகர் க.ச.எண்.130/1A ல் போடபட்டுள்ள லேஅவட்டில் எனது மனைவி பூர்ணிமா பெயரில் சைட் எண்.4 மற்றும் சைட் எண்.113 ஆகிய இரு மனைகளை வாங்கி அதில் எனது மனைவி பெயரில் வீடு கட்ட நானும் எனது மனைவியும் முடிவெடுத்தோம். மேற்படி இரண்டு சைட்டுகளிலும் வீடு கட்ட இன்ஜினியரிடம் பிளானை பெற்று 05.09.2022 ம் தேதி நெ.3 பிளிச்சி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று செகரட்டரி அவர்களிடம் காலை சுமார் 10.30 மணிக்கு அப்ளிகேசனை நேரில் கொடுத்தேன். எனது அப்ளிகேசன் சம்மந்தமாக பிளான் அப்ரூவலுக்கான இரண்டு மனைகளுக்கும் டி.டி. எடுக்க வேண்டும் என்று கூறினார். அதன் பேரில் நான் 07.09.2022 ம் தேதி இரு மனைகளுக்கும் ரூ.6100/- மற்றும் ரூ.12,540/- கட்ட சொன்னார்கள். அதற்கான தொகையை வங்கியில் செலுத்தி இரண்டு டிமான்ட் டிராப்ட்டுகள் எண்.116760 மற்றும் 116734 பெற்று நெ.3 பிளிச்சி பஞ்சாயத்து அலுவலகத்தில் பஞ்சாயத்து செகரட்டரியிடம் கொடுத்தேன். பின்பு 17.09.2022 ம் தேதி மதியம் சுமார் 2 மணிக்கு பஞ்சாயத்து அலுவலகத்திற்கு நான் சென்றபோது மேற்படி இரண்டு சைட்டுகளுக்கும் கட்டிட வரைபடத்திற்கான தொகை ரூ.8080/- மற்றும் ரூ.13012/- கட்ட சொன்னார்கள். நான் மேற்படி தொகை ரூ.21,092/- செலுத்தி பலவகை வரவு ரசீது எண்.36334, 36335 பெற்று கொண்டேன். அலுவலகத்தில் உள்ளவர்கள் என்னை சுமார் 10 நாட்கள் கழித்து வர சொன்னார்கள். நான் 30.09.2022 ம் தேதி பிளிச்சி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு போன் செய்து கேட்டபோது அப்ரூவல் ரெடியாகிவிட்டது வந்து வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். நான் மதியம் சுமார் 2.30 மணிக்கு பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து தலைவர் திருமதி.சாவித்திரி அவர்களை பார்த்து எனது மனைவி பெயரில் வீடு கட்ட அப்ரூவல் கேட்க அவர் அருகில் இருந்த அவரது கணவரை பார்க்க சொன்னார். அப்போது அங்கிருந்த அலுவலர் எனது பைல்களை கொண்டு வந்து

டேபிளின் மீது வைத்து என்னிடம் அப்ரூவல் பெற்று கொண்டதற்கான கையொப்பம் வாங்கி கொண்டு பைலுடன் சேர்த்து கட்டி வைத்து விட்டு தலைவர் பார்வைக்கு வைத்து விட்டார். நான் தலைவரிடம் என்னிடம் கையொப்பம் பெற்று கொண்டு விட்டீர்கள் பிளான் அப்ரூலை கொடுக்கும்படி கேட்டேன். அப்போது தலைவருக்கு அருகில் அமர்ந்திருந்த அவரது கணவர் ராஜன் அவர்கள் என்னிடம் ஒரு வரைபடத்திற்கு ரூ.10,000/- வீதம் இரண்டு வரைபடத்திற்கு ரூ.20,000/- அவர்களுக்கு தனியாக கொடுக்கும்படி கேட்டார். நான் சிரமத்தில் இருக்கிறேன் அவ்வளவு பணத்தை கொடுக்க முடியாது குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்க அப்படி கம்மி பண்ண முடியாது என்று சொன்னார். நான் வீட்டிற்கு சென்று விட்டேன். பின்பு எனக்கு வங்கியில் லோன் பெறுவதற்கு அப்ரூவல் அவசியம் என்பதால் நான் 06.10.2022 ம் தேதி மதியம் சுமார்12.00 மணிக்கு பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து தலைவர் திருமதி.சாவித்திரி அவர்களை பார்த்து எனது கட்டிட வரைபடத்தை கேட்க அவர் ஏற்கனவே தனது கணவர் கேட்ட பணம் ரூ.20,000/- கேட்டார். நான் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது கம்மி பண்ண சொல்லி கேட்க சரி பணம் ரூ.15,000/- கொடுத்து விடுங்கள் அப்ரூவல் கொடுத்து விடுகிறேன் நாளை பணத்தை கொடுத்து விட்டு அப்ரூவல் வரைபடத்தை வாங்கி கொள் என்று கண்டிப்புடன் சொன்னார். அப்போது அவரது கணவரும் உடனிருந்தார். நான் நாளை வருவதாக சொல்லி விட்டு வெளியே வந்தபோது பஞ்சாயத்து தலைவரின் கணவர் ராஜன் வெளியே வந்து என்னை அழைத்து சரி ரூ.15,000/- ஐ கொடுத்து விட்டு அப்ரூவலை வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் வீட்டிற்கு வந்து இந்த தகவலை எனது மனைவியிடம் சொல்லி இருவரும் கலந்து ஆலோசித்து லஞ்சம் கொடுத்து கட்டிட வரைபடம் பெற எங்களுக்கு விருப்பம் இல்லை. என்னிடம் பிளான் அப்ரூவல் கொடுக்காமலேயே கையொப்பம் வாங்கி கொண்டு அதை கொடுப்பதற்கு ரூ.15,000/- லஞ்சம் கேட்ட நெ.3 பிளிச்சி பஞ்சாயத்து தலைவர் திருமதி.சாவித்திரி மற்றும் அவருக்காக பணம் கேட்கும் அவரது கணவர் ராஜன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு ஒப்பம் (x-x-x-x-)(G.கார்த்திக்) 7.10.22 இடம் : கோவை தேதி: 07.10.2022

Respected Madam, Received the complaint on 07.10.2022 at about 07.00 hrs sd/-(xxxx) 07.10.2022 (D.Sheela), Inspr. of Police, V&AC, Coimbatore. Respected Madam, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.12/2022/AC/CB u/s. 7(a), 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 07.10.2022 at 08.00 hrs sd/-(xxxx) 07.10.2022 (D.Sheela), Inspr. of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

07/10/2022

(D. ஷீலா )
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.